1982 மார்ச் 31]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைத் தண்டனை கொடுத்ததாகத் தெரியவில்லை என்னுடைய பல ஆண்டு கால அனுபவத்தில். இனிமேல் இந்த வழக்கைப் போடும்போது, சிறைக்கு அனுப்பவேண்டும், சிறைத் தண்டனை கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டுமென்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

பச்சையாறு பாசனத் திட்டம்.

வினா எண் 672— திரு. எம். சின்னசாமி—, திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பச்சையாறு பாசனத் திட்டம் கைவிடப்பட்டது என்று தமிழக அரசு மத்திய திட்டக் குழுவிற்குத் தெரிவித்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

(இ) அத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(இ) 1975 ஆம் ஆண்டில் இத்திட்டம் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு இத்திட்டத்திற்கான அடிக்கல் அதே ஆண்டில் நாட்டப்பட்டது. ஆனால், விரிவான ஆய்வுக்குப் பிறகு இத்திட்டத்திற்குத் தேவைப்படும் இடம் களக்காட்டில் அடர்த்தியான வனப்பகுதியில் உள்ளதாலும் இயற்கை காடுகளை அழிப்பது அவசியமாகும் என்பதாலும், மற்றும் சிக்கனமற்றது என்பதாலும் இத்திட்டத்தைக் கைவிட அரசு முடிவெடுத்தது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதால் அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதே, அந்த அடிக்கல்லும் அகற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 1975 ஆம் ஆண்டிலே அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். இப்போது அந்தக் கல் இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. இருந்தால் வேண்டுமானால் யோசிக்கலாம்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள், அது சரியா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமாஷாகத்தான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

கல்லணை விரிவாக்கக் கால்வாயை மேம்பாடு செய்யும் திட்டம்.

* வினா எண். 673—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிபாரா—

மன்னார்குடி தாலுக்கா, பட்டுக்கோட்டை தாலுக்கா ஆகியவற்றில் பாசன வசதியை மேம்பாடு செய்ய கல்லணை விரிவாக்கக் கால்வாயை மேம்பாடு செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கல்லணை விரிவாக்கக் கால்வாய் நல்ல முறையில் இயங்கி வருகிறது. ஆகவே அதனை சீரமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கிறது. கல்லணை விரிவாக்கப் பகுதியிலே—மன்னார்குடி, பட்டுக்கோட்டை போன்ற பகுதிகளிலே எவ்வளவு மழை பெய்தாலும் கூட பாசனத்திற்கு நீர் இல்லாமல் பல விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள் என்றால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விக்கு தாங்கள் பதிலைச் சொல்கிறீர்களா ? அமைச்சர் என்ன சொல்கிறார் என்று திரும்பச் சொல்லி விளக்கம் வியாக்கியானம் செய்யத் தேவையில்லை.

திரு. மு. அம்பிகாபதி : அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி பரிசீலிக்கக் பரிந்துரைக்க, குழு அமைப்பதற்கு ஆலோசனை ஏதாவது செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இப்போது இருக்கக் கூடிய கல்லணை விரிவாக்கத் திட்டம் நல்ல முறையிலே இயங்கிக் கொண்டு இருக்கிறது. ஆகவே அதை விரிவாக்கவோ சீர் செய்யவோ நிலைமை எதுவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல் ஒருவேளை நீர்ப் பற்றாக்குறை இருக்கலாம்.